# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2011 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டம்

---

*(2011 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2011, ஏப்பிறல் மாதம் 01 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 9.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

**2011 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டம்**

[*2011 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ. ஓ. 11/2011*

**2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம், 2011 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்.*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டம், அதன் 2 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :- *2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அதன் (2) ஆம் உட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

"(அ) 2007, மாச்சு 31 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலாண்டிற்கு எவரேனும் ஆளின் அல்லது பங்காண்மையின் இயைபான மொத்த விற்பனை வரவு, பத்து மில்லியன் ரூபாவை விஞ்சாத சூழ்நிலைகளில் ;

(ஆ) 2007, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 2011, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலாண்டிற்கு எவரேனும் ஆளின் அல்லது பங்காண்மையின் இயைபான மொத்த விற்பனை வரவு, ஏழு மில்லியன் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத சூழ்நிலைகளில் ; அத்துடன்

2-PL 005580 -1,115 (2011/03)

(இ) 2011, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலாண்டிற்கு எவரேனும் ஆளின் அல்லது பங்காண்மையின் இயைபான மொத்த விற்பனை வரவு, இருபத்தைந்து மில்லியன் ரூபாவை விஞ்சாத சூழ்நிலைகளில்,".

(2) அப்பிரிவுக்கான ஓராம் உட்பிரிவில் "இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக" என்ற சொற்களுக்குப் பதிலாக "விடயத்திற்கேற்ப, இச்சட்டத்திற்கான அட்டவணை I இல் அல்லது அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்டவாறான தோதான வீதங்களை" என்ற சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

"(1) அப்பிரிவை அதன் (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலமும் ;

(2) மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவில், "ஏதேனும் இயைபான காலாண்டிற்கு, " என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2011, மாச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதன் முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் இயைபான காலாண்டிற்கு," என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ; அத்துடன்

(3) மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(2) 2011, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் இயைபான காலாண்டுக்காகச் சேவை விதிப்பனவு விதிக்கப்படற்பாலதான ஒவ்வோராளும் மற்றும் விதிக்கப்படற்பாலதான ஒவ்வொரு பங்காண்மையும், அவ்வாறு செய்யும்படி வரிமதிப்பீட்டாளரொருவரினால் கோரப்

படினுஞ்சரி, அல்லாவிடினுஞ்சரி, ஒவ்வோராண்டினதும் ஏப்பிறல் இருபதாம் நாளன்று அல்லது அதன் முன்னர், விடயத்துக்கேற்ப, அத்தகைய ஆளின் அல்லது பங்காண்மையின் இயைபான மொத்த விற்பனை வரவு பற்றிய அவ்வாண்டின் மாச்சு 31 ஆம் தேதியன்று முடிவடைகின்ற வரிமதிப்பீட்டாண்டுக்கான விபரத்திரட்டொன்றை, ஆணையாளர்- தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் அத்தகைய விபரங்களைக் கொண்டதாகவும் வரிமதிப்பீட்டாளருக்குக் கொடுத்துதவுதல் வேண்டும். அவ்விபரத்திரட்டானது, இப்பிரிவு தொடர்பாக ஆணையாளர் - தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்பட்ட சேவை விதிப்பனவைக் கணக்கிடுவதற்கான அடிப்படையையும், வேறு விபரங்கள் எவையேனுமிருப்பின், அவற்றையும் சுட்டிக்காட்டுதலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 10அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது அச்சட்டவாக்கத்தின் பிரிவு 10அ என்றாற் போன்று பயனுறுதலும் வேண்டும் :-

*"இஸ்லாமிய நிதி சார்ந்த கொடுக்கல் வாங்கல் களிலிருந்து வரும் மொத்த விற்பனை வரவு வரி அறவிடப் படற்பால தாதல்.*

10அ. (1) ஏதேனும் இஸ்லாமிய நிதி சார்ந்த கொடுக்கல் வாங்கல் தொழிலிலிருந்துவரும் மொத்த விற்பனை வரவு இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி வரி அறவிடப்படற்பாலதாதல் வேண்டும்.

(2) ஏதேனும் குறிப்பிட்ட இஸ்லாமிய நிதிசார்ந்த கொடுக்கல் வாங்கல் எந்த அளவுக்கு வரிக்குப் பொறுப்புடையதாகும் என்பதனைத் தீர்மானிப்பதற்காக உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி –

(அ) இஸ்லாமிய நிதி சார்ந்த கொடுக்கல் வாங்கலாக அமையும் சூழ்நிலைகளை இனம்காணுதல் ; அத்துடன்

(ஆ) ஏதேனும் இஸ்லாமிய நிதிசார்ந்த கொடுக்கல் வாங்கலிலிருந்தெழும் இலாபத்தையும் வருமானத்தையும் ஆய்ந்தறிதல்,

ஆகிய நோக்கத்திற்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய விதிகளையும் வழிகாட்டு நெறிகளையும் காலத்துக்குக் காலம் வழங்குதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு, "ஆள்" என்ற சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

"ஆள்" என்பது ஒரு கம்பனியை அல்லது ஆட்கள் குழுவை உள்ளடக்கும், ஆனால்-

(அ) 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட ஏதேனும் பதிவுசெய்யப்பட்ட சங்கத்தை அல்லது அத்தகைய பதிவிற்கு ஏற்பாடு செய்து மாகாண சபையொன்றினால் ஆக்கப்பட்ட முறையான நியதிச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் சங்கத்தை ;

(ஆ) ஒரு வானூர்தியின் அல்லது கப்பலின் சொந்தக்காரராக அல்லது அதன் வாடகைக்கெடுப்பவராகத் தொழில் கொண்டு நடாத்துகின்ற எவரேனுமாளை ;

(இ) 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறான ஏதேனும் அரசாங்க நிறுவனத்தை அல்லது உள்ளூரதிகார சபையை;

(ஈ) எவரேனும் விநியோகத்தரை ;

(உ) லொத்தரொன்றிலான விற்பனையாளரை ;

(ஊ) ஏதேனும் கூறு நம்பிக்கைப் பொறுப்பை அல்லது பரஸ்பர நிதியத்தை,

உள்ளடக்கமாட்டாது.".

**6**. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான "அட்டவணை" என்ற சொல்லுக்குப் பதிலாக, பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :- முதன்மைச் சட்டவாக்கத்துக் கான அட்ட வணையை திருத்துதல்.

**"அட்டவணை I**

*2011 மாச்சு 31 ஆம் தேதியன்று முடிவடையும் காலத்துக்கானது ; அத்துடன்*

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் அட்டவணை I ஐ உடன டுத்து இத்தால் பின்வரும் புதிய அட்டவணை உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் அட்டவணை II ஆகப் பயனுறுதலும் வேண்டும் :- முதன்மைச் சட்ட வாக்கத்துக்கு புதிய அட்டவணையை உட்புகுத்துதல்.

**"அட்டவணை II** (பிரிவு 2)

*2011 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று தொடங்கும் காலப்பகுதிக்கு*

| செலுத்தத்தகு மொத்தவிற்பனை வரவின் பாகம் | அப்பாகத்துக்கு ஏற்புடையற்பாலதான சேவை விதிப்பனவின் வீதம் |
|---|---|
| 1. 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டம் ஏற்புடையற்பாலனதாகவுள்ள தொழில் முயற்சிகள் (வருமானவரி செலுத்தத்தக்கன)– | |
| (அ) ஆடை ஏற்றுமதியாளர்கள் ; | 0.1 சதவீதம் |
| (ஆ) முதலீட்டுச்சபை வியாபார மனைகள் ; | |
| (இ) ஆடை ஏற்றுமதியாளர்களுக்கான புடவைகளின் உற்பத்தியாளர்கள். | |
| 2. விலக்களிப்புகள்/ சலுகை ரீதியிலான வீதங்கள் வழங்கப்படும் ஆட்கள்/– | |
| (அ) வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்பட்டவர்களான (வரி விலக்களிக்கப்பட்ட தாபனங்களுட்பட) ; | 0.25 சதவீதம் |
| (ஆ) நட்டங்கள் ஏற்படும் காலப்பகுதிகளின் போது ; | |
| (இ) சலுகை ரீதியிலான வீதங்களின் கீழ் வரிக்கமைந்தவர்களான ; | |
| (ஈ) (மோட்டார் வாகனங்களின் அல்லது மதுபானங்களின் விநியோகத்தர்கள் அல்லது விற்பனை | |

| செலுத்தத்தகு மொத்தவிற்பனை வரவின் பாகம் | அப்பாகத்துக்கு ஏற்புடையற்பாலதான சேவை விதிப்பனவின் வீதம் |
|---|---|
| யாளர்கள் தவிர்ந்த) விற்பனை செய்பவரினால் உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்திகள் அல்லது தயாரிக்கப்பட்ட உற்பத்திப் பொருட்கள் தவிர்ந்த உற்பத்திப் பொருட்களின் மொத்த விற்பனையில் அல்லது சில்லறை விற்பனையில் ஈடுபட்டுள்ளவர்களான ; | |
| (உ) துருவல் தேங்காய், தேங்காய் எண்ணெய் அல்லது நார், கொப்பறா மற்றும் ஷீட் இறப்பர் என்பனவுட்பட, ஆனால் ஏதேனும் மதுசாரப் பானத்தைத் தயாரிக்கும் ஏதேனும் மாற்றம் நீங்கலாக, ஏதேனும் தேயிலை, இறப்பர் அல்லது தென்னந்தோட்டத்தின் முதனிலை மாற்றத்தை நிறைவேற்றுகின்றவர்களான, | 0.25 சதவீதம் |
| ஏனையோர். | |
| 3. விளம்பரப்படுத்தும் முகவர்கள் – | |
| (அ) 2011, ஏப்பிறல் 1க்கு முன்னர் | 1.0 சதவீதம் |
| (ஆ) 2011, ஏப்பிறல் 1 அன்று அல்லது அதன்பின்னர் | 0.25 சதவீதம் |
| 4. வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் வரவானது மொத்த விற்பனை வரைவிலக்கணங் கூறப்பட்ட வேறு எவையேனும் தொழில்கள் உள்ளடங்கலாக (மோட்டார் வாகனங்கள், மதுபானம், புகையிலை மற்றும் பெற்றோலியம் என்பவற்றிலான விற்பனையாளர்கள் உட்பட) வேறு எவையேனும் தொழில்கள். | 1.0 சதவீதம்.”. |

*குறித்த சில சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளால் செலுத்தப்படற்பாலதான*

**8.** நூறு மில்லியன் ரூபாவை விஞ்சாத பணத்தொகையொன்றை ஆண்டு மொத்த விற்பனை வரவாகக் கொண்ட தொழில் முயற்சியொன்றைக் கொண்டு நடாத்துபவரும் அல்லது கொண்டு நடாத்துகின்றதும் இச்சட்டத்தின்கீழ் பொருளாதாரச்

சேவை விதிப்பனவைச் செலுத்துவதற்கு ஆளானவரும் அல்லது ஆளானதும் பொதுவில் போர்ச் சூழல் ஒன்று நிலவுவதன் காரணமாக அல்லது அத்தகைய ஆளின் அல்லது பங்குடமையின் ஏதேனும் நிதி நெருக்கடி காரணமாக 2010 திசெம்பர் 31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடையும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் அவரால் அல்லது அதனால் செலுத்தப்படற்பாலதான அத்தகைய பொருளாதாரச் சேவை விதிப்பனவின் கொடுப்பனவில் தவணை தவறியுள்ளவருமான அல்லது தவணை தவறியுள்ளதுமான எவரேனும் ஆள் அல்லது ஏதேனும் பங்குடைமை இச்சட்டத்தின்கீழ் தவணை தவறுகையிலுள்ளவாறான அத்தகைய விதிப்பனவின் கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்: *வரிகளின் கொடுப்பனவிலிருந்து அவற்றிற்கு விலக்களித்தல்.*

ஆயின், உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி அதன் பொருட்டு செய்யப்படும் வேண்டுகோளொன்றின்மீது தவணை தவறுகையிலுள்ள பணத்தொகை தொடர்பில் அத்தகைய ஆளுக்கு அல்லது பங்குடமைக்கு விலக்களிப்புச் சான்றிதழ் ஒன்றை வழங்குதல் வேண்டும் :

ஆயின், மேலும் எந்த ஆளுக்கு அல்லது பங்குடமைக்கு விலக்களிப்புச் சான்றிதழ் வழங்கப்படுகின்றதோ அந்த ஆள் அல்லது பங்குடமை சமகாலத்தில் 2011 சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வருங்கால வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் அவரால் அல்லது அதனால் செலுத்தப்படற்பாலதாகக்கூடிய எல்லாப் பணத்தொகைகளினதும் கொடுப்பனவுக்கு அத்தகைய ஆள் அல்லது பங்குடமை பொறுப்புடையதாகும் என்ற பயன்பாட்டிற்கு எழுத்திலான உறுதிப்பாடொன்றை உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்புதல் வேண்டும்.

**9**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும்பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். *ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்